# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 21/2014** **நாள் : 20/09/2014**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 2014 செப்டம்பர் 14ல் சென்னையில் மாநிலத் தலைவர் தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட சிஐடியு-வின் மாநில துணைப் பொதுச் சயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் தனது உரையில் பெல்லாரியில் நடைபெற்ற சிஐடியூ-வின் அகில இந்திய பொதுக்குழு முடிவுகள் சம்மந்தமாகவும், மத்தியில் புதியதாக ஆட்சிப்பொறுப்பேற்றுள்ள பிஜேபி சமர்பித்த பட்ஜெட் அதன் பாதக அம்சங்களையும், தொழிலாளர் நல சட்ட திருத்தங்கள், பொதுத்துறை பங்குகளை விற்பனை செய்ய நடவடிக்கை போன்றவைகளை விளக்கியதோடு, பாராளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் நடைபெறும் போது தலைநகரில் நாம் நடத்த வேண்டிய இயக்கங்கள் சம்மந்தமாக குறிப்பிட்டதோடு தேர்தல் தோல்வியின் பின்னணியில் நமது ஸ்தாபன நிலை சம்மந்தமான ஆழமான பரிசீலனையும், நமது அரசியல் நடவடிக்கை, அதன் பின்னணி போன்றவைகளை தோழர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் தொழிற் பயிற்சி பெற்றவர்கள், டிப்ளமோ பயின்றவர்கள் ஆகியோரை நமது அமைப்போடு இணைப்பது சம்மந்தமாக குறிப்பிட்டதோடு மத்திய அமைப்பின் ஸ்தாபன விரிவாக்கத்தை திட்டமிட்டு கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தையும், வெண்மணி நிதி, இரும்பு தானம் போன்றவைகளை திட்டமிட்டு செய்து முடித்திட வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர் தனது உரையில் மின்உற்பத்தியில் தனியார்மயம், அம்பானியின் செயல்பாடுகள் மெகா பவர் புராஜக்ட், காஷ்மீர் வெள்ளப்பெருக்கு போன்றவைகளை விளக்கியதோடு மத்திய அமைப்பின் ஸ்தாபன விரிவாக்கத்திற்கு கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும், தனிநபர் பிரச்னையில் தலையீடு அதனால் ஏற்படும் வீச்சு, மின்துறையில் மின்தொழிலாளர் மின்நுகர்வோர் கூட்டு இயக்கத்தின் அவசியம் போன்றவைகளை விளக்கினார்.

மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் கடந்த மாநில நிர்வாகிகள் கூட்டத்திற்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற பணிகள் சம்மந்தமான ஒரு அறிக்கையை முன்வைத்தார். அதாவது மின்நுகர்வோர் மின்வாரிய ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்னைகளின் மீது அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 20.08.2014ல் நடத்திய இயக்கம், அனல் மின்நிலையங்களில் உள்ள ஒப்பந்த தொழிலாளர்களின் கூலி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 25.06.2014ல் நடைபெற்ற திட்டமட்ட ஆர்ப்பாட்டம், 27.08.2014ல் மேட்டூர் அனல் மின்நிலையத்தில் நடைபெற்ற உண்ணாவிரதம் ஆகியவைகளை விளக்கியும், அதே சமயத்தில் 19.07.2014ல் மின்வாரிய தலைமை அலுவலகம் முன் நடத்த வேண்டிய அனல் மின்ஊழியர்களுக்கான இயக்கம் தள்ளிவைப்பு போன்றவைகளும், 27.06.2014ல் மின்வாரிய பொறியாளர்களின் கோரிக்கை முன்வைத்து மின்வாரிய தலைமை அலுவலகத்திற்கு முன் பொறியாளர் அமைப்பு நடத்திய வெற்றிகரமான இயக்கம் கோரிக்கைகள் மீது வாரியம், தொழிலாளர்களுக்கு சாதகமாக எடுத்துள்ள நடவடிக்கைகள், உத்திரவுகள் போன்றவைகளை விளக்கினார்.

இக்காலகட்டத்தில் முன்னணி ஊழியர்களுக்கான பயிற்சி முகாமாக, நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் தொழிலாளர்கள் ஆற்ற வேண்டிய பணி, மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபன விரிவாக்கம் ஆகியவைகளை முன்வைத்து தமிழகம் முழுவதிலும் எட்டு மண்டலங்களில் நடைபெற்ற வகுப்பு சம்மந்தமாகவும் விளக்கியதோடு, இடைப்பட்ட காலத்தில் 19.07.2014 அன்று புனல் மின்திட்டத்தில் பணியாற்றும் களப்பணி ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம், அதன் சிறப்பு அம்சங்கள் 6.7.2014 நடைபெற்ற கணக்கீட்டு அதிகாரிகளினுடைய குழுக் கூட்டம் அதையொட்டி நாம் அளித்த கோரிக்கைப் பட்டியல், அதன் மீது வாரிய தலைவரோடு நடைபெற்ற பேச்சு வார்த்தை அதன் சாதகமான வெளிப்பாடு 24.06.2014 இல் மதுரை பொதுக்கட்டுமான வட்டம் கிளை துவக்கம் மின்வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற்றது. கன்னியாகுமரி, கோபி, மின்திட்ட ஸ்தாபன கூட்டங்களில் கலந்து கொண்டு முறைப்படுத்துவதற்கு எடுத்த முயற்சி, வெண்மணி நிதி, இரும்புதானம், நிதிவசூல் இவைகளை முன்நிறுத்தி நாம் கொடுக்க வேண்டிய நன்கொடை தொகைகள் போன்றவைகளை விளக்கினார்.

ஜுலை 27,28,29 தேதிகளில் டெல்லியில் நடைபெற்ற இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பின் நிர்வாகிகள் குழுக் கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட மின்நுகர்வோர்கள், மின்வாரிய ஊழியர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்ட கருத்தரங்கை தேசீய மின்துறை, பொறியாளர் மற்றும் தொழிலாளர்களின் கூட்டமைப்பு சார்பாக நடத்த வேண்டியதன் அவசியத்தையும், உறுப்பினர் சேர்ப்பு, புதியவர்களை நமது அமைப்புக்கு கொண்டு வருவது சம்மந்தமாகவும் விளக்கினார்.

மேலும், ஆகஸ்ட் இறுதியில் டெல்லியில் நடைபெற்ற கூட்ட முடிவுகள் சம்மந்தமாக தோழர் எஸ். ராஜேந்திரன் அவர்களும், 2014 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு சம்மந்தமாக மாநில பொருளாளர் தோழர் ஈ. அந்தோணி அவர்களும் விளக்கினர்.

# நிர்வாகிகள் விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. 20.08.2014 இயக்கத்திற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் நிறைவேற்றியது போக மீதமுள்ள கோரிக்கைகள் மீது தொடர்ச்சியாக வாரிய தலைமையோடு பேசி முடிவுக்கு கொண்டுவர தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

2. பயிற்சி வகுப்பை நடத்தாத விழுப்புரம் மண்டலம் உடனடியாக பயிற்சி வகுப்பை நடத்திட வேண்டும்.

3. 6 மாதத்திற்கு ஒரு முறை இவை போன்ற வகுப்புகளை தொடர்ச்சியாக நடத்திட வேண்டும்.

4. மின்சார சட்டம் 2003 சரத்தின் பாதிப்புகள், ஒப்பந்த தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டல் இவைகளுக்கு எதிராக தமிழகத்தில் உள்ள தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு சங்கங்களை இணைத்து கருத்தரங்கை நடத்துவது சம்மந்தமாக இதர சங்கங்களோடு பேசிவ முடிவுக்கு வருவது.

5. சிஐடியு முன் முயற்சி எடுத்து இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கங்களை இணைத்து நடத்தும் பிரச்சாரம் சம்மந்தமாக மாநில சிஐடியு வழிகாட்டுதல் அடிப்படையில் செயல்படுவது என்று முடிவு செய்யப்பட்டது.

6. கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகள் மீது பேச்சு வார்த்தை நடத்துவது அதை வலியுறுத்தும் விதமாக கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் குழு கூட்டம் கூடி முடிவு செய்கின்ற தேதியில் சென்னையில் ஒரு இயக்கத்தை நடத்துவது.

7. அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் நிரந்தர தொழிலாளர்களின் கோரிக்கையை முன்வைத்தும், அங்கு பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு கூலி உயர்வு போன்ற அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி 8.10.2014 அன்று அனல் மின்நிலையம் முன்னர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

8. 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான போனஸ் கோரிக்கையை முன்வைப்பது, மின்வாரியத்தில் பணியாற்றும் அனைத்து பிரிவு ஒப்பந்த ஊழியர்களுக்கும் போனசுக்கான கோரிக்கையை முன்வைத்து அதை மையமாக வைத்து ஒப்பந்த தொழிலாளர்களின் திட்டமட்ட ஆர்ப்பாட்டத்திற்கு முயற்சிப்பது இதன் மூலம் மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொள்வது.

9. 2014 ஆம் ஆண்டு சந்தா சேர்ப்பில் வேகம் காட்டுவது நவம்பர் முதல் வாரத்திற்குள் பழைய சந்தாக்களை புதுப்பிப்பது. புதிய சந்தாவிற்கு திட்டமிடுவது.

10. தனியார் மின்உற்பத்தி நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களை நமது ஸ்தாபனத்திற்கு கொண்டு வரும் நடவடிக்கை வல்லூாரிலும், தூத்துக்குடியிலும் துவங்கப்பட்டுள்ளது. அதை தொடர வேண்டும், அங்கு ஸ்தாபனத்தை விரிவாக்கப்பட திட்டமிட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

11. இந்திய மின்ஊழியர் கூட்டமைப்புக்கு அளிக்க வேண்டிய நிதி, வெண்மணி, நினைவாலயநிதி, ஜனநாயக மாதர் சங்க மாநாட்டிற்கு அளிக்க வேண்டிய நிதி உதவி சம்மந்தமாக முடிவு செய்யப்பட்டது. மேலும் இரும்பு தானம், குறித்து மாவட்ட சிஐடியு-வுடன் இணைந்து நமது தோழர்களும் ஏற்கனவே முடிவு செய்தப்படி பணிகளை மேற்கொள்வது எனவும் வெண்மணி நிதி வசூல் கிளைகள் உடனடியாக முடித்து மையத்திற்கு அனுப்பிட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

12. இந்திய மின்ஊழியர் கூட்டமைப்புக்கு மின்ஊழியர் மத்திய அமைப்பில் இருந்து கூடுதலான ஒரு நிர்வாகியும், இரு குழு உறுப்பினர்கள் சம்மந்தமாகவும் பெயர்கள் முடிவு செய்யப்பட்டு அகில இந்திய மையத்திற்கு அனுப்புவது.

13. 2014 -ல் புதியதாக உறுப்பினர் சேர்ந்தவர்களுக்கு மின்கதிர் அனுப்ப இயலாத நிலையில் உள்ளதை பரிசீலித்து அதை களையும் விதமாக 2014ஆம் ஆண்டு புதியதாக உறுப்பினராக சேர்ந்தவர்களின் பெயர் பட்டியலை மாநில மையத்திற்கு உடனடியாக அனுப்பி புதியவர்களுக்கு மின்கதிர் சென்றடைய நடவடிக்கை எடுப்பது.

14. 2007 - 2009 ஆம் ஆண்டுகளில் மஸ்துாராக பணியில் சேர்ந்தவர்கள் 2009-2011ல் அவர்களுடைய அனுபவ காலம் முடிந்ததாக கணக்கில் கொண்டு கள உதவியாளராக பதவி உயர்வு அளித்து அதன் அடிப்படையில் அடுத்த கட்ட பதவி உயர்வு அளிப்பது. இப்பிரச்னையில் வாரியத்தோடு தொடர்ச்சியாக பேச்சு வார்த்தை நடத்துவது.

15. கம்பியாளர், மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு பெற 8 ஆண்டு காலம் தேவை என்ற பணி விதியும் அதே கால கட்டத்தில் வணிக உதவியாளராக உள்ளவர் வணிக ஆய்வாளராக பதவி உயர்வு பெற எந்த நிபந்தனையும் இல்லாத பாரபட்சமான அணுகுமுறையை சுட்டிக்காட்டி கம்பியாளரில் இருந்து மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு பெற 8 ஆண்டு பணி அனுபவம் வேண்டும் என்ற சரத்தை நீக்க வாரியத்திடம் முறையீடு செய்து வலியுறுத்தி பெறுவது.

எடுக்கப்பட்ட முடிவுகளை முழுமையாக அமல்படுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள



**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

# குறிப்பு

1. சமீபத்தில் மின்வாரியத்தில் பணியாற்றும் 915 கணக்கீட்டு ஆய்வாளரிலிருந்து வருவாய் மேலாளராக பதவி உய்ரவு வழங்க தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.

2. உதவி பொறியாளரிலிருந்து உதவி செயற் பொறியாளராக (மின்னியல்) பதவி உயர்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 17.9.2014-ல் DPC துவங்கியுள்ளது.

3. தொழில்நுட்ப உதவியாளரில் இருந்து இளநிலை பொறியாளர் 2ம் நிலையாக பதவி உயர்வு வழங்க தடையாக இருந்த வழக்கு முடிவுக்கு பின்னரும் பதவி உயர்வு வழங்குவதில் காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் மின்துறை பொறியாளர் அமைப்பு நீதிமன்றத்தை நாடிட உள்ளது. மேலும் வாரியத்திடமும் பதவி உயர்வு வழங்கிட தொடர்ந்து முறையீடு செய்து வருகிறோம்.

4. 3400 கணக்கீட்டாளர் 2ம் நிலையில் உள்ளவர்களை கணக்கீட்டாளராக பதவி உயர்வு பெற திட்டமட்டங்களில் DPC -களை முடித்து அறிக்கை அனுப்ப வேண்டும என்ற தாக்கீதை வெகுவிரைவில் அனுப்ப உள்ளனர்.

5. கணக்கீட்டாளரிலிருந்து கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு சென்ற முறை வழங்கிய போது 12 கணக்கீட்டாளருக்கு போதிய கல்வித் தகுதி இல்லை என்ற காரணம் காட்டி பதவி உயர்வு வழங்காமல் உள்ள பிரச்னையை நாம் கையில் எடுத்துள்ளோம். வெகு விரைவில் பதவி உயர்வோ, அல்லது பதவி மாற்றமோ பெற்றுத் தர உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

6. மின்வழங்கு வட்டங்களில்.....

   - மஸ்துாரிலிருந்து கள உதவியாளர்
   - கள உதவியாளரிலிருந்து கம்பியாளர்

   ஆகிய பதவி உயர்வுகளை வழங்கிட மேற்பார்வை பொறியாளர் உடனடியாக தகுதிகாண் அறிக்கையை கேட்டு பெற்று DPC முடித்து பதவி உயர்வுகளை விரைந்து வழங்கிட நிர்வாகிகள் திட்ட பொறியாளரை சந்தித்து விரைந்து நடவடிக்கை எடுத்திட உரிய முயற்சிகளை செய்திட கேட்டுக் கொள்கிறோம்.